# பனித்துளி செய்திகள்!

"அவர் சொல்ல ஆகும்! அவர் கட்டளையிட நிற்கும்!!" (சங்கீதம் 33:9)

துளி செய்திகள் உங்கள் வாழ்வை சாரம் ஏற்றும்..... சவாலிடும்!

(திங்கள்தோறும்)

| 10.08.2026 | துளிகள் – 32 |
|---|---|

## உலகத்தின் கஷ்டத்தை, உத்தம கிறிஸ்தவன் சுமப்பதில்லை!

இந்த மானிட வர்க்கமே, தீராத கஷ்டத்தில் மூழ்கியிருப்பதை போல் தோன்றுகிறது! ஆனால் இரட்சகர் இயேசுவை தன் சொந்தமாய் கொண்டவர்களுக்கோ, அப்படியல்ல! ஓர் உத்தம கிறிஸ்தவ ஜீவியம் செய்திடும் ஒரு பரிசுத்தவானின் சாட்சியைக் கேளுங்கள்: "என் வாழ்க்கையில் ஒரு கஷ்டமும் இல்லை! என, நான் கூறிட முடியும். ஆம், ஒன்றுகூட இல்லை! இதன் இரகசியம் யாது தெரியுமா? எழுதப்பட்ட வார்த்தையை அப்படியே விசுவாசிப்பதற்கும், நான் எங்ஙனம் நடந்து கொள்ள வேண்டும் என வேதம் கூறுகிறதோ, அங்ஙனமே நடப்பதற்கும் ஏற்ற கிருபையை என் வாழ்க்கையில் பெற்றிருக்கிறேன். இதுவே அந்த இரகசியம்! எனவேதான், எனக்கு நேரும் எல்லா உபத்திரவங்களிலும் 'பரத்தின் வெகுமதிகள்' நிறைவாய் பெற்று, ஆனந்திக்கிறேன்!" என அறிக்கை செய்தார்! இந்த ஜெயமான விசுவாசத்தின் அறிக்கை 'பாரபட்சமின்றி' நம் அனைவருக்கும் உரியது என்பதை, இன்று அறிந்துகொள்ளுங்கள்.

**– ரத்னம்**